**<u>முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>**

**<u>O.S. No. 236/2021</u>**

**<u>Witness PW 1</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மண்ணாங்கட்டி | சாதி | |
| த/பெ | வீரப்பன் | மதம் | |
| ஊர் | | தொழில் | |
| மாவட்டம்; | | வயது | |
| | | தேதி | 03.01.2024 |

இன்று (03.01.2024) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**<u>சத்தியமாக சொல்கிறேன்</u>**

கிரைய உடன்படிக்கை எந்த ஊரில் எழுதப்பட்டது என்றால் வளவனூரில் எழுதப்பட்டது. யார் அதனை எழுதியது என்றால் பத்திர எழுத்தர் சுப்பராயன். யார் யார் சாட்சியாக இருந்தது என்றால் சண்முகம் வெங்கடேஷ். சண்முகம் எங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்றால் சரிதான். கொங்கம்பட்டு கிராமம். வெங்கடேஷ் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் ராம்பாக்கம். வெங்கடேசன் எனக்கு உறவு முறை என்றால் பங்காளி. அவர்கள் கையெழுத்து இடுவதை பார்த்தேனா என்றால் பார்த்தேன். 26.04.2021 அன்று நான் மற்றும் சாட்சிகள் சண்முகம் வெங்கடேஷ் ஆகியோர்கள் வளவனூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். கிருஷ்ணகுமார் என்ற பத்திர எழுத்தரிடம் பத்திரம் எழுதும்படி சொல்லியிருந்தோம் என்றால் சரிதான். அதன் படி எழுதப்பட்ட ஆவணத்தில் சண்முகம் மற்றும் வெங்கடேசன் ஆகியோர்கள் கையெழுத்து இட்டார்கள் என்றால் சரிதான்.

தற்போது என்னிடம் காட்டப்படும் கையெழுத்துக்கள் சாட்சிகள் சண்முகம் மற்றும் வெங்கடேஷ் என் முன்னிலையில் கையெழுத்து இட்டது என்றால் சரிதான்.

**தற்போது பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் சாட்சியிடம் காட்டி கேட்ட ஆவணத்தின் உள்ள கையெழுத்து குறியீடு செய்ய உத்தரவிட கோரினார். வாதி தரப்பில் அந்த ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது. (மேற்படி ஆட்சேபனை குறித்து தீர்ப்பின் போது தீர்மானிக்கப்படும்) வாதி தரப்பில் ஆட்சேபனையுடன் 26.04.2021 தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய அக்ரிமெண்ட் ரத்து பத்திரத்தின் உள்ள சண்முகம் மற்றும் வெங்கடேசன் என்பவர்களின் கையெழுத்து மட்டும் பி.த.சா.ஆ 1 குறியீடு செய்யப்படுகிறது.**

24 மாத காலக்கெடு வைத்து கிரைய ஒப்பந்தம் பிரதிவாதியுடன் எழுதினேன் என்றால் சரிதான். பிரதிவாதி மீதி கிரைய தொகை ரூ. 1,00,000/- யை கொடுக்குமாறு என்னிடம் பலமுறை கேட்டார் என்றால் கேட்கவில்லை. கடையில் பொருட்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது அதனால் பணம் கொடுக்க சொல்லி என்னிடம் கேட்டார் என்றால் பணகஷ்டம் இருக்கிறது கொடுங்கள் என்றுதான் கேட்டார். நான் பணம் கேட்ட போது கொடுக்காததால் பிரதிவாதிக்கு ஐந்து லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்றால் அவ்வாறு பணம் எதுவும் என்னிடம் கேட்கவில்லை. நான் என்னிடம் பணம்இல்லை என்று சொன்னேன் என்றால் நான் அவ்வாறு பணம் கேட்கவில்லை நான் தான் பல முறை அவரிடம் கிரையம் கேட்டேன். அதனால் நான் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுக்கிறேன் என்று வளவனூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றேன் என்றால் அவ்வாறு நான் அழைத்து செல்லவில்லை. கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டு 2 வருடம் கெடு காலம் முடிந்து அதன் பிறகு தான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு போனேன் என்றால் சரியல்ல பத்திர எழுத்தரிடம் தான் போனேன். பத்திரம் எழுதப்பட்டதா என்றால்

எழுதப்பட்டது. சாட்சி கையெழுத்து போட்டதை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். பிரதிவாதி ரவிச்சந்திரன் கையெழுத்து போட்டாரா என்றால் அது எனக்கு தெரியாது. நான் கையெழுத்து போடவில்லை என்றால் எனக்கு பணம் தீர்க்கவில்லை அதனால் நான் போடவில்லை. அதன் பிறகு 28.04.2021 ல் பிரதிவாதி எனக்குவழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். அந்த அறிவிப்பில் உரிய காலத்திற்குள் நான்கிரையம் பெறாததால் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக சொல்லியிருந்தாரா என்றால் சரிதான் வக்கீல் மூலமாக அறிவிப்பில் சொல்லியிருந்தார். அந்த அறிவிப்பில் நான் கொடுத்த முன்பணத்தையும் முன் பணம் ரூ. 2,00,000/-யை நான் இழந்துவிட்டதாக குறிப்பிட்டு இருந்தார் என்றால் சரிதான். பிரதிவாதி 28.04.2021 தேதியிட்ட அறிவிப்பு அனுப்பும் வரை நான் கிரையம் கேட்டு வழக்கறிஞர்அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். வாய்மூலமாக கேட்டேன். பிரதிவாதி கிரையம்கொடுக்க மறுத்துவிட்டாரா என்றால் பிரதிவாதி எந்த பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை. பிரதிவாதி மறுத்த பிறகு பணத்தை நீதிமன்றத்தில் செலுத்தி வழக்கு போட்டேனா என்றால் இல்லை. என்னிடம் பணம் இல்லாததால் நான் நீதிமன்றத்தில் செலுத்தி வழக்கு போடவில்லை என்றால் சரியல்ல என்னிடம் பணம் இருந்தது. வழக்கு தாக்கல் செய்த பிறகு பணத்தை நிதிமன்றத்தில் கட்டியுள்ளேனா என்றால் கட்டியுள்ளேன் எந்த தேதியில் கட்டியுள்ளேன் என்றால் தேதி நியாபகம் இல்லை. ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி அறிவிப்பு கொடுத்த இரண்டு மாதம் கழித்து தான் வழக்கது போட்டேனா என்றால் சரியல்ல 7 நாள் கழிந்தவுடன் வழக்கு தாக்கல் செய்தேன். மீதி கிரைய தொகை கொடுக்க என்னிடம் பணம் எதுவும் இல்லை அதனால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரைய பத்திரம் எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை முன்பணத்தையும் கொடுக்க அவசியம் ஏற்படவில்லை

என்றால் ச ரியல்ல. குறித்த காலத்திற்குள் நான் கிரையம் செய்துகொள்ளாதால் பிரதிவாதிக்கு ரூ. 5,00,000/- நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல நான் 3 மாதத்திற்குள்ளேயே நான் கிரையம் கொடுக்க சொல்லி கேட்டேன் இரண்டு மூன்று நாட்கள் ஆகட்டும் என்று சொல்லிவிட்டார். கிரைய ஒப்பந்தம் மற்றும் கிரைய ஒப்பந்த ரத்து பத்திரம் ஆகியவைகைளை பற்றி சாட்சிகள் சண்முகம் மற்றும் வெங்கடேஷ் ஆகியவர்களுக்கு நன்றாக தெரியுமா என்றால் தெரியும். வழக்கு தாக்கல் செய்ய முகாந்திரம் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யப்படுவது என்றால் சரிதான்.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

I Additional Subordinate Judge,
Villupuram